STC.No.436/2019

date 04.09.2024

Pw1 – வினோத், த/பெ.ரெங்கராஜ்

**இந்நீதிமன்ற சி.எம்.பி எண் 4603/2023 ல் கடந்த 21.08.2024ல் ஏற்பட்ட உத்தரவின் பேரில் ம.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியை எவ்வாறு தெரியும் என்று வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தல் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி விவரத்தை நான் சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் நான் பணம் கொடுக்கும்போது வேறு யாரும் சாட்சியாக இருந்தார்களா என்றால் இருந்தார்கள். மேற்படி சாட்சியாக யார் இருந்தார்கள் என்று மனுவில் கூறவில்லை. உண்மையாகவே எதிரிக்கு நான் பணம் கொடுத்திருந்தால், யார் முன்னிலையில் பணம் கொடுத்தேன் என்று புகாரில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் விவசாயத் தொழில் செய்துவருகிறேன். எதிரிக்கு கொடுத்த தொகை வெளிநாட்டில் நான் வேலை செய்து வைத்திருந்த தொகையாகும். நான் வருமான வரி செலுத்துவதில்லை.

வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Cost Rs.2000/- பெற்று கொண்டேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்